




ஓலை 160| ஓசை 283| பிப்ரவரி 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## ஆறுமுக நாவலர்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

## பொருள்

அறிவு தரும் நூல்களைக் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் இடையே உள்ள வேறுபாடானது, மக்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் போன்றது.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847


அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## வீரன் கேண்மை கூரம் பாகும்!

**பா வகை : ஐந்தடித் தரவு கொச்சகக் கலிப்பா**




முகிலுந்தான் மறவத்தால் முழுநட்பின் தென்றலாலே
அகிலத்தின் கூரம்பாய் அமுதமான மழையுந்தான்
மகிழ்வுடனே குத்தியேதான் மண்ணுலகின் வலிமையாகும்.
வகிடெடுத்தாற் போலவேதான் வளம்பெருக்க வெள்ளமோடும்;
அகிலமெல்லாம் கூரம்பாய் அரும்நட்பாய் ஆகிடுமே!

அருச்சுனனின் ஏகலைவன் தன்நட்பே கூரம்பு:
பெரும்சான்றோர் நட்பேதான் பெரிதுவக்கும் கூரம்பு:
அருங்கலைகள் மறவரவர் அரும்நட்பாய் ஆகிடுமே;
இருக்கின்ற காலமெல்லாம் இன்நட்பாய் விளங்குகுணம்,
அரும்பாது காப்பான ஆற்றலுடை கூரம்பாய் விளங்கிடுமே!




நன்னடத்தை நன்னுரைகள் நற்செயல்கள் நல்லுடம்பு
நன்பண்பு நல்நேயம் நன்கட்டுப் பாடுகளும்
பொன்னான மான்புடையோர் போற்றுகிற நட்பானால்,
துன்பமின்றி வாழுகின்ற துயர்களைந்து முன்னேறும்
நன்துணையாம் கூரம்பாய் நானிலத்தில் துளங்கிடுமே!

மறவர்தம் நட்பினையே மருவியோர்க்கோ அந்நட்பே
மறவமாகக் காக்கின்ற மாக்கூர்மை அம்பாகும்;
அறத்தினையே நட்பாக்க மறவரிடம் கொண்டதொரு
சிறப்புடைய அடைகாத்து சீருடனே காக்கின்ற
உறவாகக் கூரம்பாய் உதவிடுமே உணர்வோமே!

**இலக்கணக் குறிப்பு:**

இது ஐந்தடித் தரவு கொச்சகக் கலிப்பா. ஐந்தடியும் ஓரெதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று, எல்லாச் சீர்களுமே காய்ச் சீர்களாக வந்துள்ளன. அடிதோறும் நான்கு சீர்கள் பெற்றிருக்கும். காண்பதற்கு கலி மண்டிலம் போலவே இருக்கும். பெரும்பான்மையாக முதல் சீரை நிரையசையில் தொடங்கலாம். இயலா நிலையில் சிறுபான்மையாக முதல் சீரினை நேரசையில் தொடங்கலாம். இப்படி இரண்டு கலிப்பா நிரையசையில், இரண்டு கலிப்பா நேரசையில் தொடங்கப் பட்டுள்ளன. பெரும்பான்மையாகக் காய்ச் சீர்களாக வரும். ஈரசைச் சீர்களும் விரவி வரலாம். தளை பார்க்கத் தேவையில்லை. திறமுடையவர்கள் வெண்டளை கொண்டும் எழுதலாம்.


**நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன்**

### நேரிசை வெண்பா

மண்ணினைச் சாணம் மறைக்கத் தெளித்திட
கண்டவர் போற்றக் கலைநயம்-மண்டிட
வண்ணப் பொடிதனில் வஞ்சியர் கோலமிடக்
கண்ணைக் கவருமே காண்.

### இன்னிசை வெண்பா


வெண்புள்ளி வைத்தே விரலிடை மாவேந்தி
வெண்கோட் டினையே விரைந்திழுக்கும் மங்கை
பழகிய கோலத்தைப் பார்வையால் தோற்றியே
அழகாய் முடிப்பாள் அறி.



கவிஞர் செ. கலைவாணி

# பாசம்

என் அழுகையை
கருணை,பாசம் என்று
நீங்கள் சொல்லாமல்
போனாலும்
பரவாயில்லை.
இயலாமை
என்று மட்டும்
முத்திரைக் குத்தி
விடாதீர்கள்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# சொல்லால் அழியும் துயர்





குகையில் பிறந்த மனிதனுக்கு
வாழ்வும் வளமும் குகைக்குள் என்றாகிட
குரங்கின் பண்பில் தன்னை  அறியாதவன்
நதியின் போக்கில் நாகரிகம் வளர்க்க
நாடோடிப் போக்கில் நடந்ததன் பயனாய்
குழுக்களும் குடும்பமும் புதிதாய் விரிந்து
சமைத்தலின் சாகசத்தில் உணவின் ருசியறிய
தொழிலென உழவும் தொன்மையில் பிறந்திட
எண்ணங்களும் சிந்தனையும் சைகையில் பரவிட
இளைப்பாறியிருந்தது ஆதியின் மனிதம்.
சித்திரமும் சைகையும் சேர்ந்தே நடத்திட
வளரும் நாகரிகத்தில் ஒலிகளின் வழியே
உருவாக்கிய மொழிகளும்
உணர்வுகளைப் பெருக்கி
இல்லறம் சிறந்து நல்லறம் நீட்டி
சமூகத்தின் உயிர்ப்பில் சமத்துவம் கூட்டின.
தொழிலின் நீட்சியும் தொன்மையின் ஆட்சியும்
இனத்தையும் மதத்தையும் மனதினில் விதைத்து
பிரிவுகளுக்குள்ளே பிரிவினை வளர்க்க
சிறியோன் பெரியோன் என்றே
சில்லறைத்தனங்கள் எல்லை மீறிட.
நல்லதைத் தாண்டி நச்சுகள் முளைத்தே
அல்லவை விதைத்து அகத்தைக் குப்பையாக்கிட
ஏர்களின் பின்னே வயிறுகள் வளர்த்தே
சீர் பெற்ற கூட்டத்தில் பணமும் ஆசையும்
பகையினைப் பெருக்கி குழிகளைப் பறித்திட
எல்லாமறிந்தும் ஏதோ ஒன்றில்
முழித்திட்ட பொதுநலத்தில்
கற்பனை விரிய கனவுகள் சிறகடிக்க
இலக்கியமும் பக்தியும் வழிகாட்டியாகும்
எழுத்தைப் பிரசவித்தே
போதனையும் தத்துவமும் அமைதியை நாட்டிட
புறப்பட்ட தருணங்களில்
போர்களும் பொறாமையும் மங்கிடத் தொடங்கின.

உழைப்பின் வேகம் உடலைச் சுருக்க
அறிவியலின் ஆக்கம் கருவிகளை வளர்க்க
மூளையின் திறமையில் இளைப்பாறும் தேகத்தில்
ஓடிடும் வேகத்தில் மனிதனும் நகர
உடனுக்குடனே பயனைத் தேடும் மனமும் விழித்திட
இணக்கத்தை இழந்திட்டு தீயில் நின்றிடும்
மனிதனுக்குள்ளே உறங்கிக் கிடக்கும்
அன்பின் சுவடுகளைத் தட்டி எழுப்ப
கருணையின் கரம் பற்றி
மனதினில் பிறந்திடும் சொல்லே போதும்.
வெல்லும் சொல்லால் விளைந்திடும் பயனை
சொல்லும் நிறைக்கும் சுகத்தின் வானத்தை
நில்லாது  உயர்த்திடும் நிறைவின் நிலையில்
கரைந்திடும் துயரென காலத்தில் எழுதுக
கசிந்திடும் ஈரத்தில் அழியாது நின்றே
சொல்லும் வென்றிடும் துயரத்தின் வேரினை.

கவிஞர் இளையவன் சிவா

ஒன்றுமில்லை
ஒரு குறையும் இல்லை
என்று பெருமை பேசிவிட்டு.

கண்ணீர் மல்க
இதயம் அழ
இருப்பே தொலைந்து

அன்பின் சொற்கள் இழந்து,
ஏதிலியாகி நிற்பது
நேசத்தில் சகஜம்தான்.

ஆயினும்
அது பேரன்பின் தேசத்தில்
ஒரு அரசியல் சூட்சுமமேயன்றி
வேறில்லை.




கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# உண்மை

அனைவருக்கும் ஒருநாள்
மரணம் வருமப்பா.
அப்போது நிலையாமை
உண்மையை தருமப்பா.
சேர்த்து வைத்த
பணமெல்லாம் வீணப்பா
பிறரோடு சேர்ந்து வாழ்ந்தால்
வாழ்க்கை தேனப்பா.

தன்னலம் மறந்த மரமாய் வாழ்ந்தால்
தரணி உனக்கு சொந்தமப்பா.
உன்னலம் கொண்டு வாழ்ந்தால்
வாழ்க்கை தீப்பந்தமப்பா.




வேரை மறந்த மரங்கள்
நின்றதில்லை வையகத்தில்
நீரை மறந்திடாதகேணியாய்
நீ வாழ்ந்தால் நீடிப்பாய்
உலகின் கையகத்தில் .

ஆணவத்தின் பலியாடுகளாய்
அன்றாடம் வாழும் நீ
மனிதன் இல்லையப்பா.
ஆசைகளை அழித்து பக்குவம்
அடையாது போனாலும்
நீ புனிதன் இல்லையப்பா.
உருகும் மெழுகிடம்
தியாகத்தின் பொருளை கேளப்பா.
தன் காயம் மறந்து அனைவரையும்
தாங்கும் பூமியிடம் பொறுமையை கேளப்பா.

வெட்டினாலும் நிழல் தரும்
மரத்திடம் "இன்னா செய்தாரை"
குறளை கேளப்பா.
கேளாது போனால்
உன் வாழ்க்கை அன்றாடம்
கொட்டும் தேளப்பா.

கவிஞர் முனைவர். அ. ச. மு. முனியாண்டி

உன் மூச்சில் நான் மறைந்திட
என் உணர்வில் நீ தெரிந்திட
இதழின் ஓரம் புன்னகை
என் மனதில் நீயே
மௌனம் பேசியதே.



கவிஞர் மோனிஷா

வரவின் செல்வம்
வரமும் அல்ல.
வன்மமாய் வந்தால்
வலிகள் மெல்ல.

பொன்னில் ஆசையில்
பொங்கினால் தீமையே.
பொற்கரங்களினால் கொடுக்கும்
பொற்கிளியும் மேன்மையே.

வறுமையில் முகிழ்ந்தே
வாடினால் சிலுவையல்ல.
வாழ்வில் உழைப்பை
வாசித்தால் பிழையேயல்ல.

அன்பில் நெகிழ்ந்தே
அள்ளிக் கொடுப்பதின்
அருமை உணரும்
அருளுடையாரும் இங்கே.

நல்வழியில் தேடும்
நற்செல்வம் நன்றே.
நாளும் பொழுதும்
நாடுவோம் முயற்சினையே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# அம்மா

அம்மாவின் உலகம்
வீட்டைச் சுற்றிய
தேடல்களாய்

அவளின் தேவைகள்
பாத்திரங்களின் இடையில்
பத்திரமாய்

வீட்டின் சுவர்களில்
அவளின் விரல்கள்
விலாசங்களாய்

சமையலறை காய்கறிகளின்
கண்காட்சியில் அவளும்
காட்சிப் பொருளாய்

அவள் சாதத்தில் குழைந்து
சாம்பாரில் வியர்க்கும்
தினசரி கிழிசல்களாய்

அனைவரின் தேவைகள்
தேடும் அவளோ குடும்பத்தின்
வேடந்தாங்கலாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி


மறக்கவே நினைக்கிறேன்
மாற்றம் தந்த நிகழ்வை
மற்றவை நேர் இல்.

பழுத்த மரக்கிளையில்
ஓய்வெடுக்கும் புள்ளினம்
நனைந்த வேர்கள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# கடவுள் தந்த வரம்



பாசத்தில் தாயாய்
பாதுகாப்பில் தகப்பனாய்
அன்பில் சகோதரனாய்
அரவணைப்பில் சகோதரியாய்

ஆறுதல் தேடி
தோள் சாயும் தருணங்களில்
உறுதியாக நிற்கும் தோழியாய்

நட்பில் நல்ல நண்பனாய்
கனவுகளில் காதலனாய்
புரிந்து கொள்வதில்
பொறுப்பான கணவராய்
புன்னகையில் குழந்தையாய்

ஆண்டுகள் பல கடந்தும்
காதல் சோராத நம்பிக்கையாய்,
என் கரம் பிடித்து இன்றும்
விட்டுக் கொடுக்காமல்
போராடும் போராளி அவன்

என்னுள்ளே மறைந்திருந்த
என்னைத் தேட வைத்த
அரிய பொக்கிஷம் தான்
என்னவன்

அவனுடன்
மனம் நிறைந்த வாழ்க்கை வாழும்
ஒவ்வொரு நாளும் ஆனந்தமே


காதலாய் தொடங்கி
வாழ்க்கையாய் மாறிய
கடவுள் தந்த வரம்.
அவன் எனக்கு.

கவிஞர் ந. கவிதா, கருங்கல்பாளையம் (ஈரோடு)

தீரும் வரை
தீராததேதோ
தீரா சிந்தைவசம்

எது தீராதோ
தீர்ந்து விடுமென
தீரா ஆவலில்

உன்னை விட
அதிகம் பகிர்ந்தது
காகிதம் சுமந்த
கம்பி வளைவு



உடன்வராது போயினும்
உள்ளம் கரைத்து செல்லும்
எதற்காகவோ சிவந்த அந்தி!

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# சினம் தவிர்

உள்மனத்தில் அமைதிகொள்ளின் செய்யும் செயலில்
உணர்வுகளும் சமநிலையாய் இயக்கம் கொள்ளும் !

கள்ளமனம் கொண்டிட்டால் உணர்வில் மயக்கம்;
கயமையெண்ணம் தோற்றுவிக்கும்; கடமை மறக்கும்!

துள்ளியோடும் திமிர்மனத்தில் சினமும் தோன்றின்
தொடர்ந்திட்ட உறவையெல்லாம் பகையாய் நினைக்கும்!

முள்ளென்றே சொற்களையும் பேச்சில் வார்க்கும்;
முயன்று சேர்த்த உறவையெல்லாம் வெட்டிச் சாய்க்கும்!

கோபம் ஒரு நல்ல மொழி; உதடுமட்டும் பேசும்போது!
கோபம் ஒரு நல்ல ஆயுதம்; உறையோடு ஏந்தும் போது!

கோபம் ஒரு நல்ல குரல்; பின்னணியில் ஒலிக்கும் போது!

கொஞ்சத்தைப் பயன்படுத்தவில்லை;
மிகுதியைப் பயன்படுத்தத் தெரியவில்லை;

மொத்தத்தில் கோபத்தை வீண்செயும் நம்மீது
கோபத்திற்குக் கூட கொஞ்சம் கோபம்தான்!



கவிஞர் ஆ ச கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# இறுதிச்சடங்கு

கண்ணைப் பறிக்குதாம்
பாடை அலங்காரம்!
காதைப் பிளக்குதாம்
வேட்டுச் சத்தம்!
சங்கு முழங்க பறை அடிக்க
ஒப்பாரி வைத்தபடி
குலுங்கி குலுங்கி
ஊர்வலம் போகுதாம்!
வீதி எங்கும் பூக்களாம்
மாலைகள் இறைப்பட
நீர் இறைத்தபடி
தண்ணி வண்டி
முன்னே போகுதாம்!
போகும் வழிக்குப் புண்ணியமாம்
கோவிந்தா கோவிந்தா
ஆட்டமும் பாட்டமும்
என்னத்திற்காம்!
பார்த்துக் கொண்ட பவுசு
பல்லைக் காட்டுதாம்!
வீட்டிற்குள்ளே இடமில்லையாம்
தவித்த வாய்க்குத்
தண்ணீர் இல்லையாம்!
பசித்த வயிற்றுக்குக்
கஞ்சி இல்லையாம்!



கேட்க ஒரு நாதி இல்லையாம்
பெருமைக்காகப் பகட்டாகக்
குலுங்கி குலுங்கி போகுதாம்
இறுதி ஊர்வலம்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# அப்பா



எல்லோருக்கும் அப்பா உண்டு
எனக்கும் உண்டு
வகை வகையாய் "அப்பா " க்கள்!
இவ்வுலகில் கண்டேன்!

அப்பா அப்பா
அழுதது ஞாபகமுண்டு
ஆனால், இறுதி அழுகை
சொல்லமுடியவில்லை அதன் வேதனை

கண்ணெனக்கண்டேன் அப்பாவை
கண்டிப்புடன் காத்திடும் போது
கண்மூடியே உறங்கிவிட்டார்
கண்மணி நான் அவர் முன்னாடி
அழுவதை பார்க்காமல் இருக்கவே

தேடித்தேடியே உணவு தந்திடுவார்
தேடாமல் இருந்தே நான் உண்பதற்கு
காலாகாலமும் நான் நோயின்றி வாழ
காத்தார் நல்ல பாதுகாவலனாய்

அப்பா என்றது அபாயத்தில் இருக்கும் போது
நல் துணையாக ஆச்சரியமாய் கண்ட விடயங்கள்
ஒவ்வொன்றாய் பார்க்கும் போது
பிரச்சனைகளை சமாளிக்கும்போது
கூறும் ஒரே வார்த்தை நீதானே அப்பா

நீயின்றி இவ்வுலகில் நானில்லை
நீதானே விதைத்து முளைக்கச் செய்தீர்
அறுவடை காண இன்று நீயில்லாமல்
அழுகிறேன் இன்று வாழ்வுப் பாதையிலே

அப்பா மீண்டும் ஒரு முறை
அன்பாய் உனைக் கட்டியணைக்க
காத்திருக்கிறேன் கனவிலே
காலம் தாழ்த்தி விடாதீர்கள் என் உறக்கத்திலே



கவிஞர் திருமதி. ஜூவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# ஆரோக்கியம் காத்திடுவோம்



துரித உணவுதனை
தூரமாக வைத்திடுவோம்
ஆரோக்கியம் தரும்
அன்னத்தைப் புசித்திடுவோம்

இரசாயன கலவையில்
இதயமும் பாழாகிடுமே
இயற்கையில் விளைந்தவைதனை
இனியேனும் உண்போம்

அவசரகதியில் துரிதமாக
உண்பதைத் தவிர்ப்போம்
ஆறஅமர அமர்ந்து
சாப்பிடப் பழகுவோம்

புதுப்புது நோய்கள்
உடலைத் தாக்குகிறதே
காரணம் அறியாது
மருத்துவர்களும் திணறுகின்றனரே

பழமையை மீட்டெடுப்போம்
பிணியது அண்டாது வாழ்ந்திடுவோம்
இளமையில் சோர்வது
இல்லாது போகட்டும்

முன்னோர்கள் வழியில்
முதுமையிலும் ஆரோக்கியமாய் இருந்திடுவோம்
பசுமையை நேசித்திடுவோம்
பண்பாட்டைக் காத்திடுவோம்

அங்காடியின் உணவுகளை
அறவே தவிர்ப்போம்
மண்பானைச் சமையலை
மீண்டும் கையிலெடுப்போம்

நவீன முறையில் உண்டாவது
நாவிற்கு சுவையாகும்
நலமது கெடும்
மேனியது தளர்ந்திடும்

அக்கறையுடன் இருப்போம்
இன்னுயிர்தனைக் காப்போம்
ஆரோக்கியம் காத்திடுவோம்
ஆனந்தமாய் வாழ்ந்திடுவோம்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

வான்மல்லித் தோட்டத்தின்
தோட்டக்காரன் உறங்கச் செல்ல
தேனொளியாள் மெதுவாய்
முகம்காட்டி நுழைந்தாள்
தன் மணாளனுக்கு
சரம் வேயும் மலர் கொய்ய!
அவள் வருகை கண்டதும்
ஆயிரம் வெள்ளிகள் பூக்களாய் மலர்ந்தன
அடுக்கு மல்லி ஒருபுறம்
ஒற்றை வட்டம் மறுபுறம்
குண்டுமல்லி கொத்தாக,
குவிந்தன மலர்கள் முத்தாக!
கண்ட பிறை முகத்தாள்
அதைக் கள்ளத்தனமாய்க் கிள்ளிப் பறித்து
இருள் கூந்தலில் சூடிக்கொண்டாள்!
அவள் சூடுவதும், பின்பு அவை வாடுவதும்
பல ஜென்ம ஜென்மமாய்த் தொடர
அட! அவளா? அதுவா?
இது கனவா? நனவா?
எண்ணி எண்ணி வியக்கின்றேன்!
என்னுள் தோன்றி கட்டுண்டக் கவிகளை
அள்ளி அவிழ்த்து விடுகின்றேன்!



கவிஞர் ஜமுனா ஜெகன், நாகர்கோவில்

# தேவை இன்னொரு வேள்வி

வசந்தத்தின் வருகைப் பதிவேடு
உன் பாதத்தில் பதியமாவதால்
உன்னைத்தேடி அலைகிறது
பூங்காற்று!

எங்கோ உருவாகும்
மின்னலின் சரம் அத்தனையும்
உன் புன்னகை நெருப்பில்
புடம்போட்டது தெரியாமல்
எரிமலையின் தனலொன்றை
உன்னிடம் இரவலாய்க் கேட்டது என்னிதயம்!




அலகு மாறும்
ஆடம்பரக்கச்சேரி அத்தனையும்
அணியாகும் லாவகம்
உன்னிடமிருப்பது தெரியாமலே
எதார்த்தமாக நுழைகின்றாய் என்னிதயத்தில்!

சரக்கெனக் கொய்யும்
சந்தனத்தில் முகிழ்ந்த அம்பெனறின்
வழிப்பயணமாய் முடிந்தது
இரவலாய் அமைந்த என் வாழ்வு!

எது நிழல்? எது நீயென
உழவும் பொழுதை
எல்லாம் கடந்தபின்
எதுவுமறியாத இளமானாய்க் கடத்துகின்றாய்
இன்னொரு வேள்விக்கு ஆகுதியிட!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# சுகம்

அன்பே!

உனக்கு வெற்றியே
பிடிப்பதாலும்!

எனக்கு உன்னையே
பிடிப்பதாலும்!

நீ வெற்றி பெறவே!

ஒவ்வொரு முறையும்
தோற்கிறேன்!

உன்னால் வைக்கப்படும்
தேர்தல் வாக்குப்பதிவில்!

வாக்குகளின்றியே!

உன் காதல் தேர்தலில்
வாக்குகளின்றி!

தோற்றாலும் சுகமே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி


# உன்னை நீ உணர்

உலகம் வலிகளை தரக்கூடும்
உனக்கு நீயே மருந்தாகு
கவலைகளை நீயும் கருதாமல்
விதியின் வழியில் விளையாடு

நாளை என்பது வாழ்வில்லை
இன்று என்பதே நிஜமாகும்
வென்று காட்டிட போராடு
வெற்றி வந்திடும் உன்னோடு

நெஞ்சினில் ஆசை நிறைவு செய்
நித்தமும் அதற்கு எடை போடு
கனவு என்பது மெய்யாகும்
காலம் என்பதே கை கூடும்

காதல் என்பது தள்ளாட்டம்
அதை கடந்த பின்பே தேரோட்டம்
வாழ்க்கை என்பது போராட்டம்
அது வந்த பின்பே தடுமாற்றம்
இறுதிவரை நீ போராடு
வெற்றி வந்திடும் உன்னோடு.



கவிஞர் வசந்தகுமார், சேலம்

# அவள் வசியக்காரி

நான் தொங்கிவிடவும் துணிந்து விட்டேன்
கயிற்றில் அல்ல அவள் காதில்
ஊஞ்சலாடும் ஜிமிக்கியாக.

குழியில் விழவும் குதித்து விட்டேன்
புதைகுழியில் அல்ல அவள் புன்னகைக்கும் போது
வரும் கன்னக் குழியில்.

சிவந்து விடவும் சிந்தித்தேன்
காயமாக அல்ல
அவள் இதழ் தீண்டும் உதட்டு சாயமாக.

சூடு தாங்கவும் தயாரானேன் தீயினால் அல்ல
அவள் மூச்சுக் காற்றை சுவாசிக்கும்
மூக்குத்தியாக.

வாடிவிடவும் விரும்பி விட்டேன்
முகம் வாட அல்ல
அவள் கூந்தலில் மல்லிகை பூவாக.

நான் தலைமறைவாகிடலாம் என்று எண்ணினேன்
அச்சமாக அல்ல
அவள் முதுகில் ஒளிந்திருக்கும் மச்சமாக.

சிறை செல்லவும் முடிவு செய்தேன்
கொலையாளியாக அல்ல
அவள் அழகை வர்ணிக்கும் கலைஞனாக.

காலம் முழுவதும்
காலடியில் கிடக்க கிளம்பி விட்டேன்
கொத்தடிமையாக அல்ல
அவள் காலில் இசைக்கும் கொலுசின் இசையாக.

நான் மாட்டிக் கொள்ளவும் மறுக்கவில்லை
வம்பினால் அல்ல
அவள் கைகளுடன் கதை பேசும் வளையாளாக.



நான் ஓயாமல் ஓட
ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறேன்
ஒலிம்பிகில் அல்ல
அவள் கைகோர்த்திருக்கும் கடிகாரமாக.

மொத்ததில் அவள் என்னை
வசியம் செய்து விட்டாள்
அவள் நினைப்பிலே இருக்கும்படி
வசியக்காரி அவள்.

கவிஞர் ர. ரமேஷ், திருப்பூர்

# மெய்நிகர் உறவுகள்

பொய்யான உலகில் மெய்யான உறவுகள்
பார்க்கத் துடிக்கும் அப்பாவி மனிதர்களே
பழகிப் பார்த்து பாரினில் மனிதர்களை
பண்புடையோரென அறிதல் இயலாதென்பதை அறிகவே!

தொலைபேசி அலைபேசியாகி அனைவரையும் மயக்கியது;
தூரமாய்ப் போன உறவுகளை நெருங்கிடவே உதவியது;
திறன்பேசியாகி நமது அன்றாட பணிகளையும்
திடுதிப்பென்று வந்திடும் புத்தம்புது பணிகளையும்
திறமையாக செய்துமுடிக்க திறன்பபேசி தேவைதானே!

இணையவழி சந்தித்து இலக்கியம் பேசிட,
இதயத்திற்கு இதமான கவிதைகளைப் படைத்ததிதிட,
இரும்புப் பாதையோ வான்வழியோ சாலை வழியோ
இடுக்கனின்றி பயணித்திடமுன் கூட்டிப்பயணச் சீட்டுப்பெற்றிட,
இறங்குமிடம் ஏறுமிடம் யார்துணையுமின்றி யறிந்திட
இங்கு வாழ்வோர்யாவருக்கும் திறன் பேசி தேவைதான்!

தனிமைப்போக்கும் அருமருந்தாய் இருந்திடவேண்டிய நவீனபொருட்கள்
தனித்தீவாய் ஒவ்வொரு மனிதனையும் மாற்றியக்கொடுமை
தமியேனென்னால் தமிழில் கூறிட இயலுமோ!
தனியொருவர் தனக்கெதுபிடிக்கிற தோவதனைப் பார்த்திட
தாம்முன்பின் அறியோரோடு பேசிட பழகிய
கிடைக்கின்ற சுதந்தரத்தால் விட்டில்பூச்சியாவது பெருங்கொடுமையே!

முகநூல்புலனம் போன்றபொழுதுபோக் குச்சாதனங்களில் காலம்மறந்து
முகம்புதைத்து கிடப்பதால் நம்மில்லங்களில் அரிசி வேகாது;
பாடுபட்டு சேர்த்த பணத்தை பாழானா
விளையாட்டுகள் விளையாடி வீணடிப்பது அறமன்று;
விகாரமான படங்களைப் பார்த்து விக்கித்து தவிப்பதுமேனோ?

எந்தவொன்றானா லுமதனைநன்கு ஆராய்ந்துப் பார்த்து
ஏற்கத்தக்கு ஏற்றுயேற்கக் கூடாதன தவிர்த்து
எள்ளளவும் நம்வாழ்வும் நம்மவர்வாழ்வும் சிதையாது
ஏற்றமுறு வண்ணம் வாழ்வதன்றோ நல்வாழ்வு!



குறள் 466:
செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

9 'ஈ "பிரிவு



ஒன்பதாம் வகுப்பு
கணித விடைத்தாள்களைத்
திருத்திக் கொடுக்கும் ஆசிரியர்
வெற்றிப் பெற்ற
மாணவர்களுக்கு
வகுப்பறையின் உள்ளேயே
விடைத் தாள்களைக்
கொடுத்து விட்டார்கள்
மீதி மாணவர்கள் அனைவரும்
வகுப்பறையின் வெளியே நிற்கிறோம்.
இப்போது வாசிக்கப் படுகிறது
வரிசை எண் 13
ஐந்து மார்க் என்று
நானோ
எனது மார்க்குக்காக
கவலைப்படாமல்
என் வரிசை எண் 13
எந்த பாவமும் செய்யாமல்
அவமானப்படுகிறதே
என்று கவலைப்படுகிறேன்.
/


எந்த சொல்லும் எந்த வார்த்தையும்
எந்த பெயரும் குற்றம் அல்ல.
காலங்காலமாய்
அந்த சொல்லையும் அந்த வார்த்தையும்
தவறாகவே நாம்
வழக்கத்தில் வைத்திருந்து
கடைபிடித்ததினாலே மட்டுமே

இப்போது
அந்த சொல்லும் அந்த வார்த்தையும்
குற்றமாகி நிற்கிறது
ஆம்
மீண்டும் சொல்கிறேன்
வார்த்தையில் ஒன்றுமில்லை
வாழ்க்கையில்தான்
எல்லாமே இருக்கிறது
என நினைக்கிறன்.
குற்றத்தை நாம் சுமப்பதற்கு பதில்
வார்த்தைகளை சுமக்க வைக்கிறோம்
அவ்வளவுதான்


கவிஞர் இரா. மதிராஜ், அலப்பட்சாக் கவுண்டன் புதூர்

எழுதப்பட்ட வரிகளுக்குள்ளும் ;
வெளிப்படுத்திய வார்த்தைகளுக்குள்
யாதார்த்தத்தின் வழி(லி)

எழுதப்பட்ட வரிகளுக்குள்ளும் ;
வெளிப்படுத்திய வார்த்தைகளுக்குள்ளும் ;
உள்ளங்களைத் தேடாதே.



இன்னும்
எழுதப்படாத வரிகளுக்குள்ளும்;
வெளிப்படுத்தப்படாத
வார்த்தைகளுக்குள்ளும் ;
மௌனித்துக் கொண்டும்
மரணித்துக் கொண்டும்
இவ் வாழ்க்கையைக்
கடக்கின்றன
பல
உள்ளங்களும்
உண்மைகளும்.

கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று (இலங்கை)

# அன்றில் காதலே

## (இரட்டை கிளவி இசையில்)


சல சல ஓடும் நதியாய்
பாயுது உன் நினைவு.
சிலு சிலு தென்றலாய்
வருகுது உன் உறவு.

மென் மென் கனவுகள்
இமையில் துயிலுதே.
துளி துளி மழையாய்
காதல் நெஞ்சில் தூறுதே.

மினு மினு மின்னல் ஒளியாய்
பெண்ணே உன் பார்வை.
இடி இடியாய் என்னில்
இறங்கவே, நெஞ்சே வீழுதே.

அலை அலையாய்
கரையை மீறும் அன்பில்,
எண்ணம் கரையக் கரைய
உன்னில் நான் கலந்தேன்.

குக்கூ குக்கூ குயிலின்
மொழியும் காதல் பேசிட,
பற பற பறந்தேன்
பறவை ஆனேன்
உன் வானில் நானே.



சில சில நொடி
நாமும் பிரியும் போது,
மள மள என கண்கள்
நீரைப் பொழியுமே.

கணம் கணம் தோறும்
உன் அருகில் இருந்தாலே,
கல கல என பூவிதழ்
புன்னகை பேசிடுமே.

பட பட பார்வைகள்
பாக்கள் எழுதவே,
மதியே உன்
குளு குளு பார்வையில்
என்னையே மறந்தேன்.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# தைத்திங்களும் தை மகளும்



குரோதி ஆண்டும் போனதே
விசுவா வசு வருடமும் வந்ததே!
பழையன கழிதலும் புதியன புகுதலும்,
(போகி பண்டிகையும் வந்ததே )

இது காலம் காலமாக
நடக்கின்ற செயலன்றோ
வரும் காலம் வசந்தகாலமே
எண்ணங்களின் செயல்பாடே
வண்ணங்களின் வெளிப்பாடே

வண்ணமலரின் நறுமணமாய்
மகரந்தத்தின் இனிமையாய்
நாதத்தின் ஓசையாய்
தேனின் சுவையாய்
சூரியனின் ஒளி கீற்றாய்
தை மகளும் தரணிக்கு
ஒளி யூட்ட வந்துவிட்டாளே
புது நெல்லை குற்றியே
புது பானையில் வெல்லமும்
பாலும் கலந்தே படைத்தோமே சூரியனுக்கும்!
காலம் காலமாய் உழைத்திட்ட கால்நடைக்கும்
நன்றியுடனே நாமும்
பொங்கல் வைத்துவழிபட்டோமே!

காணும் பொங்கலும் உற்றாரும்,
சுற்றத்தாரும் கண்டும் மகிழ்ந்தோமே!
வாழ்க்கையின் தத்துவத்தை
உலகுக்கே வடிவமைத்த உத்தமராம் வள்ளுவரும்
விழா எடுத்தும் மகிழ்ந்தோமே!

தை பிறந்தால் வழியும் பிறந்து விட்டதே!
புது வரன்களும் அமைந்திடுமே!
புதுமனையிலும் மகிழ்ச்சி பொங்க புகுந்துட்டோமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# யார் அவன்?

அவன் புரியாத பொருள் தெரியாத கவிதை,
அதனால்தான் என்றும் எனக்குப்
பிடித்தவனாக வாழ்கிறான்.

அவன் சில பொழுதுகளில் தாயாக மாறுகின்றான்
எனக்காக என்றும் துணை நிற்கின்றவன்.

நெருப்பு க் கண்ணாடியில் பிரதிபலிக்கும் பிம்பமாக
அவன் என் நினைவுகளில் தங்குகின்றவன்.

வசீகரித்து சிறகுகளை எனக்காக விரித்து
கொண்டு வானில் பறக்கும் மாயவன்.

அவனிடம் தோற்பதால்தான்
இம்சைகள் அனைத்திலும் நான் தப்பி விடுகின்றேன்

நான் காணாமல் போவதும் அவனிடமே
என்னை கண்டெடுப்பதும் அவனிடமே.

மர்மங்களின் ரசிகன்
அவனால் பல அற்புதங்கள் காண்கின்றேன்

எனக்கு போதிக்க வரவில்லை
அவன் என்னை போசிக்க வந்தவன்

அவன் அன்பு காவலன்
மனம் மாறாத மன்மதன்

அவனை ரசித்தவளாக
வாழ்கிறேன் என்றும் புன்னகையுடன்



கவிஞர் ஏ எம் முர்ஷிதா பேகம், கண்டி (அக்குறனை)

# இயற்கை என்னும் இதயம்

அறிவியல் வளர்ச்சியென
நாளுக்கு நாள் முன்னேற்றம்
வளர்ச்சியின் பாதையிலோ
கண்டுபிடிப்புகள் ஏராளம்.

ஒவ்வொரு நாளும் வளர்ச்சிதான்
விஞ்ஞானத்தில் முன்னேற்றம்தான்
மக்களின் பெருக்கமும்
நாளுக்கு நாள் அதிகம் தான்.

பெருகிவிட்ட மக்களாலும்
தொழிற்சாலை கழிவுகளாலும்
சுற்றுச்சூழல் பாதிப்புதான்
மனித வாழ்வுக்கே ஆபத்துதான்.

நவீன உலகம் நகரமயமயமென
காடுகளும் மலைகளும்
காணாமல் போகுது.
இயற்கைக்கு ஆபத்துதான்
இன்னல் வந்து சேருமே.

மாதம் மும்மாரி மழையும்
மார்கழிப் பனியும்
சித்திரை வெயிலென
முன்னோர்கள் வகுத்த
காலமெல்லாம் கனவா போயாச்சு.

காலநிலை மாற்றத்தால்
பூமியில் உயிர் அத்தனைக்கும்
ஆழி பேரலையாய்
அல்லல் வந்து சேருமே.



இயற்கையை காக்கவே
இணைந்தே செயல்படுவோம்
மரம் வைத்து மழை பெறுவோம்
பசுமை பூமியாய் காத்திடுவோம் கண்களாய்.

மாசில்லா காற்றும் தூய குடிநீரும்
உயிரென போற்றவே.
இயற்கையை "இதயமாய்"
போற்றியே காத்திடுவோம்.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

புதையல்கள்
நிறைந்த
புத்தகங்களுடனே
பயணிக்கிறேன்


வாத்தியாகிய
நான்
சமூகத்தில்

வத்தியாக
ஒளிரவும்
மணக்கவும்.



கவிஞர் அ. சேவியர், கடலூர்


நேரில்
அடடா என்ற புகழுரைக்குள்
புதைத்து பூர்த்தி செய்து
கள்ளப் புன்னகையொன்றில்
நீந்துவது
சற்று தொலைவில்
அவள் ஒரு அடங்காதவள்
பேச்சிலே கர்வம் துளிர்க்கும்
திமிருக்கு சொந்தக்காரி என்ற
அடைமொழியில்
ஓ...அவளா
நீயாவென்ற எக்களிப்பு
பார்வையின் கொத்தல்
உன்னை எனக்கு தெரியுமென்ற
இறுமாப்பின் எள்ளல்
நிறங்கள்
தீட்டிய வண்ணங்கள்
நிறம் தப்பியதால் மாறுபட்ட
கோணத்தில் மங்கலாய்
எங்கோ சிதறிய கவனத்தில்
எக்குத்தப்பான கணக்கில்
மனம் தீட்டிய சித்திரங்கள்
நிஜங்கள்
மூடிய முகத்தை
கழட்டி கழட்டி
அடடா எத்தனை கவசங்கள்



நாட்களின் நகர்வில்
முகத்திரையை மாற்றுவதும்
ஓர் கலைதான்
எண்ணம்
நட்சித்திர ஒளியின்
சித்திர கூடத்தில்
கண்ணை பதிக்கையில்
மனம் பறிக்கிறது கொத்தாய்
அழகான எண்ணக் கனவுகள்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

முள்ளோ
கல்லோ
மிதித்த
வலி
ஆறுதலடைகிறது
அப்புறப்படுத்திய பின்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# கடலின் தாளம்





கரையைத் தொட்டுச் செல்லும் அலைகளின்
கரங்கள் ஓயாமல் காற்றுடன் சேர்ந்து
உருவாக்கும் ஓசையே நீலக்கடலின் தாளம்!
சீற்றமுடன் ஒலிக்கும் சினம் கொண்டெழுகையிலே!
ஆர்ப்பரித்து வரவேற்கும் அமுத நிலவினையே!
அமாவாசை என்றால், நிலவில்லை எனும்கோபம்
ஏமாற்றம் கொண்டவரின் ஏக்கமாய் எதிரொலிக்கும்!
சினமோ, சாந்தமோ மாறிடும் மனநிலைக்கேற்ப
இனம் பிரித்த தாளங்கள் எதிரொலிக்கும்!
வருகையும், விலகலும் , எழுச்சியும், வீழ்ச்சியும்
மாறிமாறி இடம்பெறும் மனிதர்களின் வாழ்வினிலே
என்றுணர்த்தும் எந்நாளும் விரிகடலின் தாளங்கள்!
கரைதனில் நிற்கையில் கால்வருடும் அலைகள்
கரைதாண்டிப் பேரலையாய் பயணித்தால் துயரங்கள்!
எல்லை மீறினால் விளைந்திடும் துன்பமென்று
சொல்லாமல் சொல்கிறதோ கடலின் தாளங்கள்?

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# படைத்தவனைப் பாருங்கள்

படைத்தவனைப் பாருங்கள்
பாறையாக கல்லாக
பறித்தவனைப் பாருங்கள்
திருடனாய் திருந்தாதவனாய்.

பூக்களைப் பாருங்கள்
வண்டுகளை கவருமென்று.
புறக்கடையைப் பாருங்கள்
சுத்தமா இருக்கிதென்று.

இறைவனைப் பாருங்கள்
இவனருள் கிடைக்குமாவென்று.
இளைத்தவனைப் பாருங்கள்
இவனுடம்பு தேறுமாவென்று.

இருப்பவனைப் பாருங்கள்
சேமிப்பது எவ்வாறென்று.
இருப்பவனைப் பாருங்கள்
கொடுப்பதற்கு தயாராவென்று.

உழவனைப் பாருங்கள்
உழைப்பது கடினமென்று.
உலகத்தினைப் பாருங்கள்
சுழலுவது நிற்குமாவென்று.

உண்பவனைப் பாருங்கள்
பசிக்கொடுமை என்னவென்று.
உயர்ந்தனைப் பாருங்கள்
தாழ்ந்தநிலை துயரமென்று.



எளியவனைப் பாருங்கள்
வறுமை கொடுமையென்று.
எறுமையைப் பாருங்கள்
கருமையும் அழகென்று.

எதிர்ப்பவனைப் பாருங்கள்
எதிரியும் நன்பனென்று.
எரும்பினைப் பாருங்கள்
சுருசுருப்பு அவசியமென்பது.

ஒலியைக் கேளுங்கள்
செவி அவசியமாவென்று
ஒளியைப் பாருங்கள்
இருளை அகற்றுமாவென்று.

ஓவியத்தைப் பாருங்கள்
ரசனை என்னவென்று.
ஔவையைப் பாருங்கள்
அரிச்சுவடி எதர்க்கென்று.

கவிஞர் ரவி சீனிவாசன்(எ) பகலவன், உடுமலைப்பேட்டை

## அது சடங்காய்

கருத்து மோதலில்
தானே சரி என எண்ணி
தொடர்ந்து பேசுகையில்
நான் சொல்வதையும்
கேள் என் கையில்
'சொல்லு ' என்ற உதட்டு வார்த்தை
வெறும் சடங்குதான்

அதை எப்படியும்
மனதுக்கும் புத்திக்கும்
கொண்டு செல்லப்போவதில்லை
முன் அனுமானம் கொண்டதால்.
*******
அது அப்போ
ஏட்டுக்கல்வி மட்டும்
சிறப்பாய் அமைந்தால்
வாழ்வின் உச்சம் தொடலாம்

நம் பணி
சிறப்பாய் அமைந்தால்
யாருடைய விமர்சனமும் வராது
முயற்சியும் ஆத்மார்த்தமும்
உழைப்பும் தொடருகையில்
தோல்வி எங்கிருந்து வரும்
என்ற எண்ணம்
அப்போ களயதார்த்தம்
பார்க்கும் முன்னே



இப்போ உடன் பணி
செய்பவர்களின் எண்ணமும்
பார்க்கும் விதமும்
பேச்சும் எதிர்பார்ப்பும்
பிடித்தவை பிடிக்காதவைகளும்
அதை வைத்து நம்மீதான
மதிப்பீடுகளும்

நம்மின் சூழ்நிலைக்கான
எதிர்வினைகளும்
முயற்சிக்கு முன்னான புரிதலும்
சுற்றி நடப்பவைகளை
உற்று நோக்குதலும்
மனித மனங்களை
முகத்தின் வழியை
படிக்கும் முயற்சிகளும்

என நிறைய
காரணிகள் உள்ளன
வெற்றிக்கும் விமர்சனமின்மைக்கும்
வாழ்க்கையில்

உணர்த்தியது யதார்த்த உலகம்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# தேடலில் கனவு

தேடும் கனவுகளில் கலைந்த
நிறைகள் ஏராளம்

தேடப்பட்ட இடத்தில் மீண்டும் தேடலில்
தொடங்குகிறது வாழ்க்கை



கடந்த நிலைகள் மீண்டும் ஒரு கணம்
கடந்து செல்கிறது காரணமின்றி

மௌனங்களின் பின்னணியே
பலர் வாழ்க்கையின் தொடக்கம்

வாழ்க்கையின் வேகம் வரலாற்றில்
மறைந்து போகும் காலம்.

கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

மறுநாள் மாலையில் நெய்லி அலைபேசியில் நரேனைத்தொடர்பு கொண்டு," கவிதா வந்தாளா? என்ன சொன்னாள்.?"என்று கேட்டாள்.

நரேன் எல்லாவற்றையும் விவரித்து விட்டு "காலையிலே வந்து எனக்கு காட்டிற்குள் செல்வதற்கு அனுமதி வாங்கித்தாருங்கள் நான் போய் வசந்திற்கு என்னாயிற்று என்று பார்த்து விட்டு அந்தச் செடியைக் கொண்டு வருகிறேன் என்றாள். அனுப்பி வைத்தேன். அவள் அந்த ஆலகாலச்செடியைப் பார்க்கும் வரை தொடர்பில் இருந்தாள்.

அதன் பின் என்னாயிற்று என்று தெரியவில்லை. போன் அடிக்கிறது, ஆனால் எடுக்க மாட்டேன் என்கிறாள்" கொஞ்சம் கவலை தோய்ந்த தொனியோடு சொன்னான்.

"உனக்கு கொஞ்சமாவது அறிவிருக்கிறதா"? பெண் பிள்ளையை காட்டுக்கு, அதுவும் கொஞ்சம் கூட தெரியாத இடத்துக்கு, இப்படி அனுப்பி வச்சிட்டு, சே! ம் ம்....சரி, அவளுக்கு எதாவது ஒண்ணு ஆச்சிண்ணா, என்னச் செய்யபோறோம்னு தான் தெரியல. திடீர்னு வச்ந்த் வந்து கேட்டால் என்ன பதில் சொல்லப் போறோம்னு தான் தெரியல.

சரி நீ சீக்கிரம் ஆஸ்பத்திரியிலே இருந்து எழுமபி வெளியே வர்றதுக்கு பாரு. எங்க திட்டம் என்னண்ணு சொல்றேன். இந்த பதினாலு நாள் முடிந்ததும் நேராஆஸ்பத்திரிக்கு வந்து உன்னையும் கூட்டிக்கிட்டு ஒரு காரிலே நேரே காட்டுக்கு போற மாதிரி தான் ஐடியா. சோ, தயாராக இருக்கிறது நல்லது.

அதுக்கு முன்னாடி வசந்த் அல்லது கவிதாவின் போன் வந்தா உடனே போன் பண்ணு..."

"சரி"

"என்ன ஒண்ணும் பேச மாட்டேங்கிற"

"பின்ன என்ன? என்ன சொன்னலும், செய்தாலும் தப்புண்ணு சொன்னா நான் என்னசெய்றது"
"நரேன். ஏரக்குறைய நான் ஒரு அடிமை மாதிரி தான் உணர்கிறேன்"
"ஏன் நெய்லி அப்படி சொல்கிறாய்?"
"இவனுக வெரட்டுற வெரட்டல்ல என்ன செய்யப் போறோம்ணு தான் புரியல... ம்...ம்... நீ முடிஞ்சா அதுக்கு முன்னால முடிஞ்சா காட்டிற்குப் போக முடியுமா பாரு.. இவனுகட்ட கைய நீட்டி பணம் வாங்கிட்டு இப்ப என்ன செய்யணும்ணு தான் புரியல."
"ஸாரிப்பா, போனமா செடிய புடுங்கினமா, கொண்டு கொடுத்தமா, நம்ம வேல முடிஞ்சிதுண்ணு நெனச்சேன்.இவ்வளவு எதிர் பார்க்காத நிகழ்வுகள் நடக்கும்ணு நெனக்கல. கண்டிப்பா முயற்சி செய்யறேன்."

*******************************************************************

அமைச்சர் மணிமாறனின் கோபம் உச்சியில் நின்று கொண்டிருந்தது. "பிரபு, கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தீரா? அந்த மருந்துக்கம்பெனி காரன் நான் என்னவோ அவனை ஏமாற்றி விட்டதைப் போல கத்தி விட்டுப் போகிறான். நீ இங்கே இருந்து என்னத்த புடுங்கிகிட்டு இருக்கேண்ணு புரியலை" அறையின் அங்குமிங்கும் அலைந்து கொண்டே கேட்டவர், தன் உதவியாளன் முத்துராமனைக் கூப்பிட்டு" முத்து, இனி இவரை நம்பிப் பிரயோசனமில்லை. என்ன செய்யலாம். நீயே சொல்லு" என்றார். தலையை சொறிந்து கொண்டு நின்ற முத்து, ஏதோ சொல்லிய போது முதலில் அமைச்சருக்கு புரியவில்லை. "என்ன முத்துராமன் கொஞ்சம் பலமா சொல்லு" என்றார்.

" நம்ம தான் வந்தவுடனே நம்ம வேலய ஆரம்பிச்சுருவோமே சார். ஆஸ்பத்திரியிலே ஒரு நர்ஸப் புடிச்சி கையிலே கொஞ்சம் பணத்தைக் கொடுத்துட்டேன் . இது வரைக்கும் கெடச்ச தகவல் பிரகாரம், அனேகமாக, நரேன் உடம்பு சரியானதும் காட்டிற்கு போறதா பிளான் இருக்கு. பதினாலு நாளாயிற்றுண்ணா.. அந்த நெய்லி அதான் அவனுடைய காதலியும் அந்த இங்கிலாந்து காரனுவளும் சேர்ந்து காட்டுக்குள்ள போற மாதிரி ஐடியா..."

கவிஞர் இரஜகை நிலவன்

"அது சரி...." அமைச்சர் கேட்க ஆரம்பிக்கு முன், " அதுக்கு முன்னால அவன் காட்டுக்குள்ள போயிற்றாண்ணா நமக்கு எப்படி தெரியுமுண்ணுதானே கேக்கிறீங்க?.."என்றான் முத்துராமன்.

"முத்து நீ வில்லண்டா.. நான் கேக்க நெனக்கிறத அப்படியே யோசிக்கிறடா... ஆமா... அதுக்கு என்ன வழி பண்ணியிருக்க.."

" நீங்க கவலைப்படாதீங்க... இனிமே நரேன் ஒரு இஞ்ச் அசைஞ்சாலும் நமக்கு செய்தி கொடுக்க ஆள் இருக்கு"


"ஆங்... எதையும் ஆதாயமில்லாமல் முத்து செய்ய மாட்டான். இதுக்குத்தான் வந்த அன்னைக்கே பத்தாயிரம் வாங்கிட்டுப் போனியா? " என்ற அமைச்சர் "பிரபு நீங்க ஒண்ணு பண்ணுங்க. அந்தக் கொரோனா மருந்துச் செடியை கொண்டு வர்றதுக்கு வேற ஏதாவது வழி இருந்தாலும் கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்க.." என்றார்.

"அய்யா.அந்த நீலாங்கர நர்சை பார்த்துட்டு வர்றேன். முடிஞ்சா அந்த கண்ணன் பயலையும் புடிச்சு இழுத்துட்டு வர்றேன்" என்றான் உதவியாளன் முத்து.

"என்ன பண்ணுவியோ தெரியாது. அந்த ஆலகாலச் செடி சீக்கிரமா நம்ம கைக்கு வரணும்" என்றார் அமைச்சர்.

## கட்டுரை

இன்றைய காலகட்டத்தின் வளர்ச்சி மிக உச்சத்தில்தான் நிற்கின்றது. முன்பெல்லாம் ஏதாவது பொருட்கள் வாங்க வேண்டுமென்றால் நீண்ட தூரம் நடக்க வேண்டும். அதில் ஏதாவது மாற்றம் இருந்தால் மீண்டும் செல்ல வேண்டும். பேருந்து வசதியும் மிகக் குறைவுதான். ஆனால், இப்போது அப்படியில்லை



பொருட்களை கடைக்கு சென்று வாங்குபவர்கள் இருந்தாலும் கூட ஆன்லைனில் ஆர்டர் செய்பவர்களே மிக அதிகம். இரண்டு தட்டு தட்டினால் போதும் முநூலிலும் வாட்சாப்பிலும் நமக்குத் தேவையானதை வாங்கிக் கொள்ளலாம். புகைப்படத்தை பார்த்தே தெரிவு செய்யலாம். ஏதாவது மாற்றம் என்றாலும் மாற்றிக் கொள்ளலாம். இவ் வியாபாரம் மிக பாரிய அளவில் இப்போது நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றது. ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் மிக பாதுகாப்பான முறையில் இவ்வியாபாரத்தை செய்கின்றனர். அவ்வளவு இக்கால கட்டம் உயரந்துள்ளது.

ஆனால் எவ்வளவு நவீனம் வளர்ந்தாலும் இன்னும் வறுமையில் சிக்கித் தவிப்பவர்கள் இல்லாமல் இல்லை. இப்படி விரல் நுனியில் உலகம் சுருங்கிவிட்ட நிலையில், நாம் வாங்கும் பொருட்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது. ஆனால், அந்தப் பொருட்கள் உண்மையில் நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றனவா? ஒரு பக்கம் வீட்டின் அலமாரிகள் தேவையற்ற பொருட்களால் நிரம்பி வழிய, மறுபக்கம் ஒருவேளை உணவிற்கும் அடிப்படைத் தேவைக்கும் வறுமையில் வாடும் மக்களும் அதை வெளிப்படுத்த தயங்கி இதழ் புன்னகையோடு கடப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இந்த இடைவெளியைக் குறைக்க நாம் பழக வேண்டியதுதான் 'மினிமலிசம்'

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி (இலங்கை)

கட்டுரை

அதாவது ஆன்லைனில் பொருட்கள் வாங்குவது உண்மையில் இலகுவான விடயம்தான் ஆனால் அளவுக்கு மீறினால் அனைத்தும் நஞ்சு என்பது போல கடைகளிலும் ஆன்லைன்களிலும் ஆப்ஃஃர் என்று நாம் வாங்கி வாங்கி குவிக்கும் போது நம் வீட்டின் தரம் தாழ்ந்து விடும். தேவைக்காதிகமாக நம் உடலில் அதிகரிக்கும் கொழுப்பு எப்படி நம் உடலுக்கு தீங்கு விளைவிக்குமோ அது போல தான் நாம் தேவைக்கதிகமாக வாங்கும் பொருட்களும், புதிய பொருட்கள் கவர்ச்சியையும் மகிழ்ச்சியையும் தரலாம் ஆனால் அது நிரந்ரமல்ல நாட்கள் ஓட நாம் அதை ஒத்த வேறு பொருள் வாங்க, நாம் முதல் வாங்கியது பலனின்றி மூலையில் கிடக்கும். இப்படி பல பொருட்களை நாம் வாங்க அவற்றின் எண்ணிக்கை பெருக இப்போது இருக்கும் வேலைப்பளுவில் அதை சுத்தப்படுத்துவதும் சேர்ந்து விடும். ழண்மையில் இலத்திரனியல் உபகரணங்கள் மட்டும் தான் சேதமாகும் வரை பயன் படுத்தப்படுகின்றது.

ஒரு பொருளை நாம் தெரிவு செய்யும் போது ஒரு பொருளை வாங்குவதற்கு முன்பு, "இது எனக்குத் தேவையானதா? இல்லை தற்போதைய ஆசையில் இந்த எண்ணம் பிறக்கின்றதா? என நன்கு யோசித்து அத்தியவசியமானதாக இருந்தால் மட்டுமே வாங்க வேண்டும். நம்மிடம் நன்கு வசதி இருக்கின்றது என்பதற்காய் அள்ளிக் குவிப்பதில் மன அலுத்தம் தான் அதிகமாகும். நம்மால் முடிந்த அளவு வறுமையில் இருப்பவர்களுக்கு உதவி செய்வதும் தேவையானவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து வாங்குவதும் நிஜமான மகிழ்வையும் நிம்மதியையும் உண்டாக்கும்.

கவிஞர் ரஸ்னா ரம்ஸான், கண்டி (இலங்கை)

### தோற்றம்:

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசம்பர் 18 இல் (சித்திரபானு ஆண்டு மார்கழி 5புதன்கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாகப் பிறந்தார். நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். தகப்பனார் ப. கந்தப்பிள்ளை, பேரன் பரமானந்தர், பூட்டன் இலங்கைக்காவல முதலியார் ஆகிய அனைவரும் தமிழ் அறிஞர்கள். அரசாங்கத்தில் வேலை பார்த்தவர்கள். நாவலருக்கு நான்கு மூத்த சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர். சகோதரர்கள் நால்வரும் அரசாங்க உத்தியோகத்தர்கள். சகோதரிகளுள் ஒருவர் வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்களின் தாயார்.

### கல்வி:

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். மூத்த தமையனாரால் முதலில் சரவணமுத்துப் புலவரிடமும் பின்னர் அவரது குருவாகிய சேனாதிராச முதலியாரிடமும்உயர்கல்வி கற்க அனுப்பப்பட்டார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.




யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் (இக்காலத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்று ஆங்கிலத்திலும்திறமை பெற்றார். அவரது 19வது வயதில் (1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் எனும் பாதிரியாருக்கு, கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும்

கவிஞர் குமர. தர்மசீலன், இதழாசிரியர்

வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். பேர்சிவல் பாதிரியருடன் சென்னைப்பட்டணம் சென்று அச்சிடுவித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.

## சமயப் பணி:

சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணிபுரியத் தொடங்கினார் நாவலர். சைவ சமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்தார். இவரது முதற் பிரசங்கம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் டிசம்பர் 31, 1847 ஆம் நாள் நடைபெற்றது. பின்னர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.



வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து செப்டம்பர் 1848 இல் தமது மத்திய கல்லூரி, 3 பவுண் மாதச் சம்பள, ஆசிரியப் பணியைத் துறந்தார்.

## அச்சுப் பணி:

சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர்பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சிலகாலமிருந்து சூடாமணி நிகண்டுரையும் சௌந்தரியலங்கரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலனயந்திரசாலைஎன்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல்விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தைவசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

**தமிழகப் பணி:**

இவரது பணி இலங்கையில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும்பரவியிருந்தது. சென்னையில் திருவாசகம், திருக்கோவையார்நூல்களை 1859 வைகாசி மாதம் வெளியிட்டார். பெரியதொரு அச்சியந்திரத்தை விலைக்கு வாங்கி, சென்னை தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன இயந்திரசாலைஎன்ற அச்சகம் நிறுவிப் பல நூல்களையும் அச்சிட்டார். சென்னையிலும் திருவாவடுதுறைமற்றும் திருநாகைக்கோராணம் ஆகிய இடங்களில் தங்கி சைவப்பிரசங்கங்கள் செய்தபின் 1862 பங்குனியில் யாழ்ப்பாணம் திரும்பினார்.

1863 மார்கழியில் மீண்டும் தமிழகம் சென்றார். அங்கு இராமநாதபுரசமஸ்தானத்தில் பிரசங்கம் செய்தார். அங்கிருந்து மதுரை சென்று மீனாட்சியம்மை சந்நிதானத்திலே பிரசங்கித்து மீனாட்சிக்கு அணிவிக்கப்பெற்ற பரிவட்டமும் பூமாலையும் அணிவிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டார்.


குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமை ஆதீனத்தில் அவர் செய்த பிரசங்கத்தை மெச்சி நாவலரை பல்லக்கில் ஏற்றித் தம்பிரான்கள், ஓதுவார்கள் சூழ்ந்து வர சகல விருதுகள், மங்கல வாத்தியங்களுடன் பட்டணப் பிரவேசம் செய்வித்தார்கள். அங்கிருந்து திருப்பெருந்துறை, திருப்பள்ளிருக்குவேளூர்,

கவிஞர் குமர. தர்மசீலன், இதழாசிரியர்

சீர்காழிஆகிய தலங்களை வணங்கிச் சிதம்பரம் சேர்ந்தார். அங்கு 1864 ஐப்பசியில் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார்.

1866 மார்கழி மாதம் சென்னை திரும்பி சைவப்பிரசங்கங்கள் செய்வதிலும் நூல்கள் அச்சிட்டு வெளியிடுவதிலும் நாவலர் ஈடுபட்டார்.

**நகுலேஸ்வரம்:**




போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நகுலேஸ்வரம் எனும் பழைமையான சிவபெருமான் திருக்கோயிலை மீண்டும் உருவாக்க முயற்சி செய்தார்

**இறுதி நாட்கள்:**

நாவலரது கடைசிப் பிரசங்கம் 1879 ஆம் ஆண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளதுகுருபூசை நாளான ஆடிச்சுவாதி அன்று வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்றது. 1879ஆம் ஆண்டு (பிரமாதி வருடம்) கார்த்திகை மாதம் 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நாவலரது உடல் நலம் குன்றியது. அடுத்த மூன்று தினங்களும் குளிக்க முடியாதிருந்ததால் நாவலரது நித்திய சிவபூசை வேதாரணியத்துச்சைவாசாரியர் ஒருவரால் செய்யப்பட்டது. 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை (05-12-1879) இரவு தேவாரம் முதலிய அருட்பாக்களை ஓதும்படிக் கட்டளையிட்டு அவைகள் ஓதப்படும்போது சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர், முதலிய புண்ணியத்தலங்களின் விபூதிஅணிந்து, உருத்திராட்சம் பூண்டு, கங்காதீர்த்தம் உட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து, இரவு ஒன்பது மணியளவில் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

# நாளை நமதே

எண்ணம்

உறுதியாக இருந்தால்

எண்ணியபடி உயரலாம்

நமது எண்ணம்தான்

நம்முடைய எதிர்காலத்தை

உருவாக்குகிறது

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com